بسم اللہ الرحمن الرحیم　　نحمدہ ونصلی علی رسولہ الکریم　　وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 39

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

06 ஸஃபர் 1442 ஹிஜ்ரி கமரி 24 தபூக் 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

24 செப்டம்பர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْٓا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ ۚ فَاِنْ تَنَازَعْتُمْ فِيْ شَيْءٍ فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டு நடங்கள். இத்தூதருக்கும், உங்களுடைய அதிகாரிகளுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். பின்னர் உங்களுக்குள், ஏதாவது ஒன்றில் தர்க்கம் ஏற்பட்டால் நீங்கள் அல்லாஹ்விடத்தும், இறுதி நாளிடத்தும் நம்பிக்கை கொண்டவர்களாயின் அதனை அல்லாஹ்விடமும் இத்தூதரிடமும் கொண்டு செல்லுங்கள். (4:60)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நீங்கள் என்னைப் பின்பற்றுவீர்கள் என்றால், உங்களிடமுள்ள சிலைகளை உடைத்தெறிவதற்கு தகுதி பெற்றவர்களாகி விடுவீர்கள். மனிதனின் உள்ளம் ஒளிகள் இறங்கும் இடமாகும். இதன் காரணமாகத்தான் அது பைத்துல்லாஹ் என்று அழைக்கப்படுகிறது. அதில் உள்ள சிலைகளை உடைப்பது மிகப் பெரிய வேலையாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

### என்னைப் பின்பற்றுங்கள். எனக்குப் பின்னால் வாருங்கள்

சுருக்கமாக, இந்த இறையில்லத்தை அதாவது உள்ளத்தை தூய்மையாகவும், சுத்தமாகவும் ஆக்குவதற்கு ஒரு ஜிஹாது (பெரும் முயற்சி) தேவைப்படுகிறது. இந்த ஜிஹாதின் வழியில் நான் உங்களுக்குக் கூறுகிறேன். அதன்படி நீங்கள் செயல்பட்டால் நீங்ககள் அந்த சிலைகளை உடைத்து விடுவீர்கள். மேலும் நான் இந்த வழியை சுயமாக உருவாக்கிக் கூறவில்லை. மாறாக, நான் கூற வேண்டும் என்பதற்காக இறைவன் என்னை நியமித்திருககிறான். அந்த வழி என்ன? என்னைப் பின்பற்றுங்கள். மேலும் எனக்குப் பின்னால் தொடர்ந்து வாருங்கள் என்பதாகும். இந்தக் குரல் புதிய குரல் அல்ல. மாக்காவிலுள்ள சிலைகளை உடைப்பதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்களும் இதையே கூறினார்கள்.

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِيْ يُحْبِبْكُمُ اللّٰهُ

நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பீர்கள் என்றால் என்னைப் பின்பற்றுங்கள். அவ்வாறே நீங்கள் என்னைப் பின்பற்றினால் உங்களிடமுள்ள சிலைகளை உடைக்கும் தகுதியைப் பெற்று விடுவீர்கள். இவ்வாறு பலவிதமான சிலைகளை நிரம்பியிருக்கும் உள்ளத்தை உடைத்தெறிவதற்கு தகுதியானவராகி விடுவீர்கள்.

உள்ளத்தை தூய்மைப்படுத்துவதற்கு தவம் இருப்பதற்கான தேவை இல்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபிகள் தவம் இருந்ததில்லை. மாறாக அவர்களிடம் இருந்தது வேறொன்றாகும். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குக் கட்டுப்படுதல் என்ற அந்த குழாயின் மூலம் சஹாபாக்களின் உள்ளத்தில் விழுந்தது. அது அல்லாஹ்வைத் தவிர உள்ள எல்லா சிந்தனைகளையும் தூள் தூளாக்கிக் கொண்டிருந்தது. இதற்குப் பதிலாக அந்த உள்ளங்களில் ஒளி நிரப்பப்பட்டுக் கொண்டிருந்தது.

நன்றாக நினைவில் கொள்ளுங்கள். இப்போதும் இறைவனின் குழாய் வழியாக வரும் ஒளி உங்கள் உள்ளத்தில் விழவில்லை என்றால் உள்ளம் தூய்மையடையாது. மனிதனின் உள்ளம் ஒளி இறங்கும் இடமாகும். இதன் காரணமாகத்தான் அது பைத்துல்லாஹ் என்று அழைக்கப்படுகிறது. அதில் உள்ள சிலைகளை உடைப்பது மிகப் பெரிய வேலையாகும். அதில் அல்லாஹ் மட்டுமே எஞ்சியிருக்க வேண்டும்.

ஹதீஸில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُ اَللّٰهُ فِيْ اَصْحَابِيْ அதாவது எனது தோழர்களின் உள்ளங்களில் அல்லாஹ் மட்டுமே இருக்கின்றான்.

உள்ளத்தில் அல்லாஹ் மட்டுமே இருக்கின்றான் என்பதன் கருத்து, அத்வைதக் கொள்கையின்படி செயல்பட வேண்டும் என்பதல்ல. ஒவ்வொரு நாயையும், கழுதையையும் இறைவன் எனக் கூறுவதல்ல. (அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம்). அவ்வாறல்ல. இதன் உண்மையான நோக்கம், மனிதனின் எந்த வேலையாக இருந்தாலும் அதன் குறிக்கோள் அல்லாஹ்வின் திருப்தியைத் தவிர வேறொன்றாக இருக்கக் கூடாது. மேலும் இறைவனுடைய அருள் இல்லாத வரை இந்த படித்தரம் கிடைக்க முடியாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 175 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

### நபிமொழி

ஹஸ்ரத் அபூஹுஸைஃபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் நாடும் வரை உங்களிடத்தில் இந்த நுபுவ்வத் இருக்கும். பிறகு அல்லாஹ் அதை எடுத்துக் கொள்வான். பிறகு நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் உருவாகும். அல்லாஹ் நாடும் வரை அது இருக்கும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பிறகு அவனது நியதிக்கேற்ப துன்பத்தை தரக்கூடிய கொடுங்கோல் ஆட்சி இருக்கும். பிறகு அதையும் அல்லாஹ் எடுத்துக் கொள்வான். பிறகு பலவந்தமான ஆட்சி ஏற்படும். பிறகு அல்லாஹ் அதையும் எடுத்துக் கொள்வான். பின்னர் **நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் இருக்கும்**. இதைக் கூறி விட்டு பெருமானார் (ஸல்) அவர்கள் மௌனமாகி விட்டார்கள். (முஸ்னது அஹ்மது தொகுதி 4 பக்கம் 273)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் தோழர்கள் இருக்கின்றனர். மேலும் எனது தோழர் சுபைர் (ரலி) ஆவார்கள்**

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழரும், பத்ர் போரில் கலந்து கொண்ட மகத்துவமிக்க சஹாபியுமான ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**பெஷாவரைச் சேர்ந்த மதிப்பிற்குரிய மிஃராஜ் அஹ்மது சாஹிப் ஷஹீத், நாரோவாலைச் சேர்ந்த மதிப்பிற்குரிய முரப்பி அதீப் நாஸிர் சாஹிப் மற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த தற்போது இஸ்லாமாபாத் லண்டனில் வசித்து வந்த மதிப்பிற்குரிய ஹமீத் அஹ்மது ஷேக் சாஹிப் ஆகியோரின் வஃபாத் தொடர்பான அறிவிப்பை ஜுமுஆவில் ஹுஸூர் அவர்கள் செய்தார்கள். மேலும் இவர்களது நற்பண்புகளை எடுத்துக் கூறியவாறு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகைக்கான அறிவிப்பையும் ஹுஸூர் அவர்கள் செய்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 ஆகஸ்ட் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **ஸஹுர்** மாதம் **21 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

பத்ர் போர் சஹாபாக்களின் நற்குறிப்பில் இன்று நான் எடுத்துக்கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) ஆவார்கள். சுபைர் அவர்களின் தந்தையின் பெயர் அவாம் பின் குவைலத் ஆகும். தாயாரின் பெயர் சஃபிய்யா பின்த் அப்தில் முத்தலிப் ஆகும். அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்லகளின் மாமி (தந்தையின் சகோதரி) ஆவார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்களின் வம்சா வழித்தொடர் கஸபி பின் கலாம் அவர்களின் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சென்றடைகிறது. அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியாரான ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் சகோதரன் மகன் ஆவார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மகள் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்தது.

இவ்வாறு ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மைத்துனியின் கணவராக இருந்தார்கள். இவ்வாறு ஹஸ்ரத் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறவு இருந்தது. இவர்களின் சுட்டுப்பெயர் அப்துல்லாஹ் ஆகும். அன்னாரின் தந்தையின் தாயரான ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள் தமது சகோதரர் சுபைர் பின் அப்தில் முத்தலிப் அவர்களின் சுட்டுப் பெயரைக் கொண்டு இவர்களுக்கு அபூ தாஹிர் என்று சுட்டுப் பெயர் வைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ஸுபைர் அவர்கள் தமது சுட்டுப் பெயரை தமது மகன் அப்துல்லாய்வின் பெயரில் வைத்துக் கொண்டார்கள். அது பிற்காலத்தில் அதிகம் பிரசித்தி பெற்றது.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களில் இவர்கள் நான்காவது அல்லது ஐந்தாவது நபராக இருந்தார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் 12 வயதில் இஸ்லாத்தை ஏற்றார்கள். சில அறிவிப்புகளின் அடிப்படையில் 8 அல்லது 16 வயதில் அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்று வந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எவர்களுக்கு அவர்களின் வாழ்நாளிலேயே சொர்க்கத்திற்கான நற்செய்தியை வழங்கியிருந்தார்களோ, அந்த நற்பாக்கியம் பெற்ற 10 சஹாபாக்களில் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் ஒருவராக இருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது வஃபாத்திற்கு முன்னர் அடுத்த கலீஃபாவை தேர்ந்தெடுக்கப்படுவதற்காகப் பெயர் முன்மொழிந்திருந்த அந்த ஆலோசனைக் குழுவில் ஆறு சஹாபாக்களில் அன்னாரும் ஒருவராக இருந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபதிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 307 சுபைர் பின் அல்அவாம் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 457 சுபைர் பின் அல்அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 67, சுபைர் பின் அல்அவாம் – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் தந்தை அவாம் அவர்கள் மரணித்த பிறகு, நவ்ஃபில் பின் குவைலத் அவர்கள் தமது சகோதரர் மகனான சுபைர் அவர்களை வளர்த்து வந்தார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் தாயார் சஃபிய்யா அவர்கள் சுபைர் அவர்களை அடித்தோ அல்லது திட்டியோ வந்தார்கள். அப்பொழுது, ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் சிறிய வயதுடையவராக இருந்தார்கள்.

இவர்களின் தந்தையின் சகோதரர் நவ்ஃபில் அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யாவிடம், குழந்தையை இப்படியா அடிப்பார்கள்? இவ்வாறா கடினமாக நடந்து கொள்வது? நீங்கள் இவரிடம் கோபமாக இருப்பது போன்று அடிக்கிறீர்களே! எனக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள் பின்வரும் கவிதையை படித்தார்கள்.

مَنْ قَالَ إِنِّي أُبْغِضُهُ فَقَدْ كَذَبْ
وَ إِنَّمَا أَضْرِبُهُ لِكَيْ يَلَبّْ
وَ يَهْزِمَ الْجَيْشَ وَ يَأْتِيَ بِالسَّلَبْ
وَ لَا يَكُنْ لِمَالِهِ خَبأً مُخَبّْ
يَأْكُلُ فِي الْبَيْتِ مِنْ تَمْرٍ وَّ حَبّْ

அதாவது நான் இவன் மீது கோபமாக இருக்கிறேன் என்று யார் கூறுகிறாரோ அவர் பொய்யுரைக்கிறார். நான் ஏன் இவனை அடிக்கிறேன்; இவனிடம் கடுமையாக நடந்து கொள்கிறேன் என்றால் இவர் வீரனாக வேண்டும். படைகளைத் தோற்கடிக்க வேண்டும். கொலையுண்டவர்களின் பொருட்களை எடுத்துக் கொண்டு திரும்ப

வேண்டாம். தமது பொருளுக்காக அமைதியாக உட்கார்ந்திருக்கக் கூடாது. வீட்டில் அமர்ந்து பேரீத்தம் பழங்களையும், தானியங்களையும் உண்டு கொண்டிருக்கக் கூடாது.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 458 சுபைர் பின் அல்அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும், இது அவர்களின் சிந்தனையாக இருந்தது. அதற்கேற்ப அவர்களின் தர்பிய்யத் வழிமுறை இருந்தது. வீரனாக ஆக்குவதற்காக இந்த வழிமுறை இருந்தது. இது மிகவும் நல்ல வழிமுறை என்று நாம் சொல்ல வேண்டும் என்று அவசியமில்லை. பொதுவாகவே, இன்றைய நாட்களில் காணப்படுவதாவது, இதன் மூலம் நம்பகத்தன்மையில் குறைவு ஏற்படுகிறது.

எவ்வாறிருப்பினும், அல்லாஹ் அவர்களை அப்போது அந்த அடியின் கடுமையின் தீயத் தாக்கங்களிலிருந்து காப்பாற்றினான். தாயின் தாய்மை பிரசித்தி பெற்ற ஒன்று அன்பும் காட்டியிருப்பார்கள். அடித்து மட்டும் இருக்க மாட்டார்கள். பிற்காலத்து நிகழ்வுகள் உண்மையிலேயே இவர்களிடம் வீரமும் தைரியமும் ஏற்பட்டது என்பதை வெளிப்படுத்துகின்றன. எதனால் ஏற்பட்டது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் எவ்வாறிருப்பினும் குழந்தைப் பருவத்தில் அந்த அடிகளின் எந்தத் தீய தாக்கமும் இவர்கள் மீது ஏற்படவில்லை.

இங்கு இன்று யாராவது இதை சோதித்துப் பார்க்க முயற்சி செய்தால், சமூக சேவக குழுவினர் உடனடியாக வந்து குழந்தையை அழைத்துச் சென்று விடுவர். எனவே இந்த வழிமுறையை தாய்மார்கள் யாரும் சோதித்துப் பார்க்க முயற்சி செய்யாதீர்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அன்னாரின் சிறிய தந்தை அன்னாரை ஒரு பாயில் படுக்கவைத்து, இஸ்லாத்தை விட்டு விட்டு நிராகரிப்பின் பக்கம் அன்னார் திரும்பி விட வேண்டும் என்பதற்காக புகை மூட்டுவார். ஆனால் இவர்களோ நான் இனி நிராகரிப்பின் பக்கம் திரும்ப மாட்டேன் என்றே கூறி வந்தார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 457 சுபைர் பின் அல்அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னார் தொடர்பாக இந்த நிகழ்வை இவ்வாறு எடுத்துக் கூறியுள்ளார்கள்:

ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் ஒரு மிகப்பெரிய வீரமிக்க இளைஞராக இருந்தார்கள். இஸ்லாத்தின் வெற்றிகளின் காலத்தில் அவர்கள் ஒரு நல்ல தளபதியாகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய தந்தையின் சகோதரரும் அவர்களுக்கு மிகவும் கஷ்டம் கொடுத்து வந்தார். பாயில் அவர்களை சுத்தி, கீழிருந்து புகை மூட்டுவார். அவர்கள் மூச்சு முட்டும் விதமாக, இப்பொழுதாவது இஸ்லாத்தை விட்டு வருவாயா? இல்லையா? என்று கேட்பார். ஆனால் அன்னார் அந்த கஷ்டங்களை சகித்துக் கொண்டார்கள். நான் உண்மையை அடையாளங்கண்டு கொண்ட பிறகு இப்போது அதை என்னால் நிராரிக்க முடியாது என்றே பதிலளிப்பார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 196,197)

ஹிஷாம் பின் உர்வா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் சிறிய வயதை உடையவராக இருந்தபோது மக்காவில் ஒருவன் அவர்களோ சண்டையிட்டான். இருவருக்குமிடையில் கடுமையான சண்டை நிகழ்ந்தது. அந்த மனிதன் ஏதாவது கொடுமை இழைத்திருப்பான். இவர்கள் சிறுவராக இருந்தார்கள். அவனோ பெரிய நபர் ஆவான். எவ்வாறிருப்பினும் அந்தச் சண்டையில் இவர்கள் அவனது கையை உடைத்து விட்டார்கள். கடுமையாக காயப்படுத்தினார்கள்.

எவ்வாறிருப்பினும் உங்கள் மகன் இவரது நிலையை எப்படி ஆக்கிவிட்டான் என்று காட்டுவதற்காக அந்த மனிதன் சவாரி மீது ஏற்றி ஹஸ்ரத் சஃபிய்யாவிடம் கொண்டு வரப்பட்டான். ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள் இவருக்கு என்ன ஆனது? என்று கேட்டார்கள். அதற்கு மக்கள், சுபைர் இவரோடு சண்டையிட்டுள்ளார். தவறு யாருடையது என்று சொல்லவில்லை.

எவ்வாறிருப்பினும் சண்டை நிகழ்ந்தது என்றதும் ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் வீரத்தைக் கண்டு இந்த கவிதையைக் கூறினார்கள்.

كَيْفَ رَأَيْتَ زَبْرًا
أَ اَقِطًا حَسِبْتَهُ اَمْ تَمْرًا
اَمْ مُشْمَعِلًّا صَقْرًا

நீ சுபைரை எவ்வாறு காணப் பெற்றாய்! வீரனை பன்னீரைப் போன்றும், பேரீத்தம் பழங்களைப் போன்றும் நினைத்து விட்டாயா? அவனை தின்றுவிடலாம்; நீ நினைத்ததுபோன்று அவனோடு நடந்து கொள்ளலாம் என்று எண்ணினாயா? அவனோ வேகமாகத் தாக்கும் கழுகைப் போன்றவன் ஆவான். நீ அவனை வேகமாகத் தாக்கும் கழுகாகப் பார்த்திருப்பாய்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 74,75 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அபிசீனியாவை நோக்கி செய்யப்பட்ட இரண்டு ஹிஜ்ரத்துகளிலும் கலந்து கொண்டார்கள். இவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனா வந்தபோது ஹஸ்ருத் முன்ஸிர் பின் முஹம்மதிடம் தங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 75 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) அவர்களின் துணைவியானரான ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் செய்து புறப்பட்டபோது நான் கருவுற்றிருந்தேன். நான் குபாவில் கூடாரம் அமைத்திருந்தபோது அப்துல்லாஹ் பின் சுபைர் அங்கு பிறந்தான். பிறகு நான் அவனை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜரானேன். அவர்கள் அவனைத் தன் மடியில் வைத்தார்கள். பிறகு அவர்கள் ஒரு பேரீத்தம் பழத்தைக் கொண்டு வரச் சொன்னார்கள். அதைச் சுவைத்து அந்தக் குழந்தையின் வாயில் முதலில் உமிழ்நீரை இட்டார்கள். அவனது வயிற்றில், முதன் முதலில் சென்றது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அளுக்குரிய உமிழ்நீர்தான். பிறகு அவர்கள் பேரீத்தம் பழத்தைச் சுவைத்து அவனது வாயில் போட்டார்கள். பிறகு அவனுக்காக பரக்கத்துக்கான துஆவைச் செய்தார்கள். அதுதான் முஸ்லிமாகப் பிறந்த முதல் குழந்தை.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மனாகிப் அன்ஸார்...... ஹதீஸ் எண் 3909)

சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அஸ்மாவின் மகனுக்கு அப்துல்லாஹ் எனப் பெயரிட்டார்கள். அவர்கள் 7,8 வயதை அடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பைஅத்து செய்ய வந்தார்கள். அவர்களின் தந்தை சுபைர் அவர்கள் சென்று பைஅத்து செய்து வா என்று கட்டளையிட்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களைத் தம்மிடம் வருவதைக் கண்டு புன்சிரித்தார்கள். புன்னகைத்த பிறகு பைஅத்து பெற்றார்கள்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அதப்.... ஹதீஸ் எண் 2146)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் முஹாஜிர்களுக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியபோது ஹஸ்ரத் சுபைர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) ஆகியோருக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். மதீனா ஹிஜ்ரத்திற்குப் பிறகு முஹாஜிர்களுக்கு அன்ஸாருடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தியபோது ஹஸ்ரத் சல்மா பின் சலாமா அவர்கள் இவர்களது மார்க்க சகோதரராகத் திகழ்ந்தார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 307 சுபைர் பின் அல்அவாம் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தமது மகன்களின் பெயர்களை ஷஹீதுகளின் பெயர்களில் வைத்தார்கள். இவ்வாறு அல்லாஹ் அம்மக்களுக்கு ஷஹாதத்தை வழங்க வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தார்கள். அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் அவர்களின் பெயரில் அப்துல்லாஹ் என்றும், முன்ஸிர் பின் அம்ர் அவர்களின் பெயரில் முன்ஸிர் என்றும், உர்வா பின்த் மஸ்வூது அவர்களின் பெயரில் உர்வா என்றும், ஹம்ஸா பின் அப்தில் முத்தலிப் அவர்களின் பெயரில் ஹம்ஸா என்றும், ஜாஃபர் பின் அபீ தாலிப் அவர்களின் பெயரில் ஜாஃபர் என்றும், முஸ்அப் பின் உமைர் அவர்களின் பெயரில் முஸ்அப் என்றும், உபைதா பின் ஹாரிஸ் அவர்களின் பெயரில் உபைதா என்றும், காலித் பின் சயீத் அவர்களின் பெயரில் காலித் என்றும், அம்ர் பின் சயீத் அவர்களின் பெயரில் அம்ர் என்றும் பெயர் வைத்தார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் சயீத் அவர்கள் யர்மூக் போரில் ஷஹீது ஆனார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 74 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இது எந்த அளவு சரியென்று தெரியவில்லை. ஏனென்றால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் பிறந்த காலத்தில் அவர்கள் முதல் குழந்தை என்பதன் காரணமாக, எப்பொழுது பிறந்தார்கள்? அப்பொழுது யாரும் ஷஹீதாகி இருந்தார்களா? இல்லையா? என்பதை அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் எவ்வாறிருப்பினும் இந்த சான்றோர்களின் பெயர்களைக் கொண்டு அவர்கள் இந்தப் பெயர்களை வைத்தார்கள்.

உர்வா பின் சுபைர் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் எவ்வளவு உயரமாக இருந்தார்கள் என்றால், அவர்கள் சவாரி செய்யும்போது அவர்களின் பாதங்கள் மண்ணில் படும்.

(அல் அஸாபா ஃபீ தமீஸிஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 458 சுபைர் பின் அல்அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் எனது தந்தையான சுபைர் அவர்களிடம் கேட்டேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது மற்றும் இதர சஹாபாக்களிடம் இருந்து நபிமொழிகளை செவியுறுகிறேன். பல அறிவிப்புகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருநது அவர்கள் எடுத்துக் கூறுகிறார்கள். நீங்கள் எடுத்துக்க நான் கேட்டதில்லை. இதற்கு என்ன காரணம்? என்று கேட்டேன்.

அதற்கு அவர்கள், நான் இஸ்லாத்தை ஏற்றதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட்டு ஒருபோதும் பிரிந்ததில்லை. ஆனால் நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறக் கேட்டிருக்கிறேன். அதாவது, எவர் வேண்டுமென்றே நான் கூறியதாகப் நான் கூறாததை கூறுவாரரோ அவர் தமது இருப்பிடத்தை நரகத்தில் அமைத்துக் கொண்டார்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 451, முஸ்னத் சுபைர் பின் அல் அவாம் ஹதீஸ் எண் 1413 – 1998 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இதன் பொருள் மற்றவர்கள் பொய்யாக அறிவித்து வந்தார்கள் என்பதல்ல. மாறாக, நான் கவனமாக இருப்பதையே, தவறாக எதையும் கூறிவிடக்கூடாது என்பதையே சிறந்ததாகக் கருதுகிறேன்.

அங்கு வேண்டுமென்றே தவறாகக் கூறுபவர்களைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது. ஆனால் எவ்வளவு முன்னெச்சரிக்கையாக இருந்தார்கள் என்றால், தவறாகக் கூட எதுவும் கூறிவிடக் கூடாது; அதன் மூலம் தண்டனையைப் பெறுபவர்களைச் சேர்ந்தவனாகிவிடக்கூடாது என்று கூறி வந்தார்கள். இது அவர்கள் மேற்கொண்ட முன்னெச்சரிக்கையாக இருந்தது.

ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் வழியில் தனது வாளை உரையிலிருந்து உருவிய முதல் நபர் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் ஆவார்கள். ஒரு முறை ஹஸ்ரத் சுபைர் அவர்கள் மக்காவிலிருக்கும் மதாபிக் பள்ளத்தாக்கில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது திடீரென்று ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாக ஓர் ஓசை வந்தது. இவர்கள் உடனடியாக தமது வாளை உரையிலிருந்து உருவியவாறு புறப்பட்டார்கள். தாம் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த இடத்திலிருந்து புறப்பட்டார்கள். வழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பார்த்து விட்டார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சுபைரே! நில். என்ன விஷயம்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஷஹீதாகி விட்டதாக எனக்கு ஓர் ஓசை கேட்டது என்றார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நான் ஷஹீதாகி இருந்தால் உம்மால் என்ன செய்திருக்க முடியும்? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! மக்காவாசிகள் அனைவரையும் நான் கொன்று விட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்தேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது இவர்களுக்காக குறிப்பாக துஆ செய்தார்கள்.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவர்களின் வாளுக்காகவும் துஆ செய்தார்கள்.

ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யப் அறிவிக்கின்றார்கள்: அவர்களது ஹக்கில் செய்யப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆவை அல்லாஹ் வீணாக்கமாட்டான் என்று நான் நம்புகிறேன்.

(கிதாபுல் ஃபஸாயிலுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 733 ஃபஸாயில் சுபைர் பின் அல்அவாம் – 1983 ஆம் ஆண்டு சவூதியிலுள்ள தாருல் இல்முத்தபாஅத்துன் நஷரில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 512 சுபைர் பின் அல்அவாம் – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & மஜ்மவுல் பல்தான் தொகுதி 5 பக்கம் 171 –

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறைவனின் வல்லமையின் தோற்றம் ஆவேன்.

(அல் வஸிய்யத் ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 306)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் பத்ர், உஹது மற்றும் இதர அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் கலந்து கொண்டார்கள். உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நிலை நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மரணிக்கவும் தயாராக இருப்பதாக பைஅத் செய்திருந்தார்கள். மக்கா வெற்றியின்போது முஹாஜிர்களின் மூன்று கொடிகளில் ஒரு கொடி ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம் இருந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 77 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பத்ர் நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இரண்டு குதிரைகள் மட்டுமே இருந்தது. அவற்றில் ஒன்றின் மீது ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 76 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உர்வா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் உடலில் வாள் வீச்சின் மூன்று ஆழமான காயங்கள் இருந்தன. அவற்றில் நான் எனது விரல்களை போட்டு வந்தேன். இரண்டு காயங்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது ஏற்பட்டன. ஒரு காயம் யர்மூக் போரில் ஏற்பட்டது.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 459 சுபைர் பின் அல்அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மூஸா பின் முஹம்மது தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்கள் மஞ்சள் நிற தலைப்பாகையின் காரணமாக எளிதாக அடையாளம் காணப்பட்டு வந்தார்கள். மஞ்சள் நிற தலைப்பாகையை அணிவார்கள். பத்ர் போரில் ஹஸ்ரத் சுபைர் அவர்கள் மஞ்சள் நிற தலைப்பாகையை அணிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதைப் பார்த்து வானவர்கள் சுபைருக்கு ஒப்பாக இறங்கி இருக்கின்றார்கள் என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 76 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அதாவது உதவிக்காக அல்லாஹ் அனுப்பிய அந்த வானவர்களும் இதே தலைப்பாகையை அணிந்து போர் புரிகின்றார்கள் என்று கூறினார்கள்.

ஹிஷாம் பின் உர்வா தன் தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்; ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறி வந்தார்கள். பத்ர் போர் நாளில் உபைதா பின் சயீதை நான் எதிர் கொள்ள நேர்ந்தது. அவன் முழுமையாக ஆயுதங்களை மேலே அணிந்திருந்தான். அவனது கண்கள் மட்டுமே தென்பட்டன. அவனது சுட்டுப்பெயர் அபூ கர்ஷ் என்பதாகும். அவன், நான் அபூ ஸாத்துல் கர்ஜ் ஆவேன் என்று கூறினான்.

இதைக் கேட்டவுடனே நான் அவன் மீது சிறிய ஈட்டியால் தாக்குதல் தொடுத்து அவனது கண்களைக் காயப்படுத்தினேன். அவன் அந்த இடத்திலேயே மாண்டு விட்டான்.

ஹிஷாம் கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறி வந்ததாக எனக்கு கூறப்பட்டது. அவர்கள் கூறினார்கள்: நான் எனது காலை அவன் மீது வைத்து முழு மூச்சாக முயன்றேன். மிகவும் சிரமப்பட்டு நான் அந்த சிறிய ஈட்டியை இழுத்து வெளியே எடுத்தேன். அதன் இரண்டு முனைகளும் உடைந்திருந்தன. அவ்வளவு வேகமாக (ஈட்டியால்) குத்தியிருந்தார்கள்.

உர்வா கூறி வந்தார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவக்ள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம் அந்த ஈட்டியைக் கேட்டார்கள். அன்னார் அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் சமர்ப்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வஃபாத் ஆன பிறகு ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அதை திரும்ப பெற்றுக் கொண்டார்கள். பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த ஈட்டியைக் கேட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அந்த ஈட்டியைக் அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வஃபாத்தானபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அன்னாரிடம் அந்த ஈட்டியைக் கேட்டார்கள். எனவே அந்த ஈட்டியை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வஃபாத்தான பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த ஈட்டியை அன்னாரிடம் கேட்டார்கள். எனவே அன்னார் அந்த ஈட்டியை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஷஹீதான பிறகு அந்த ஈட்டி ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் குடும்பத்தாருக்கு கிடைத்தது. இறுதியில், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களிடமிருந்து அதைப் பெற்றுக் கொண்டார்கள். அது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் ஷஹீதாக்கப்படும் வரை அவர்களிடமே இருந்தது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி பாகம் 12 ஹதீஸ் எண் 3998)

ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் நாளன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக தனது பெற்றோரை ஒன்றிணைத்தார்கள். அதாவது உம்மீது எனது தாய் தந்தையார் அர்ப்பணமாகட்டும் என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 450 முஸ்னத் சுபைர் பின் அல்அவாம் ஹதீஸ் எண் 1408 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஹது போர் நாளன்று ஒரு பெண்மணி எதிரிலிருந்து மிக வேகமாக வந்து கொண்டிருந்தார். அவர் ஷஹீதுகளின் உடல்களைப் பார்த்திருக்கக் கூடும். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு பெண் அவர்களை பார்ப்பதை சரியானதாக கருதவில்லை. மிக மோசமான நிலையில் உடல்கள் சிதைக்கப்பட்டிருந்தன. எனவே அந்தப் பெண்ணை தடுத்து நிறுத்தினார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: இவர் எனது தாயார் சஃபிய்யா என்று எனக்குத் தெரிந்து விட்டது. ஆக நான் அவர்களிடம் ஓடிச்சென்று அவர்கள் ஷஹீதுகளின் உடல்களை அடையும் முன் நான் அவர்களை சென்றடைந்து விட்டேன். அவர்கள் என்னைப் பார்த்து எனது நெஞ்சில் கையைவைத்து என்னைப் பின்னால் தள்ளினார்கள். அவர்கள் வலுவான பெண்மணியாக

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறைவனின் இருப்பைப் பற்றி தெரிவிப்பவர்களும், அவன் ஒருவன்; அவனுக்கு இணை இல்லை என்பதைப் பற்றிய அறிவை மக்களுக்கு கற்றுக் கொடுப்பவர்களும் நபிமார்கள் மட்டுமே ஆவர் என்பதும் நினைவில் இருக்க வேண்டும்.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

இருந்தார்கள். மேலும் என்னிடம், தள்ளிப்போ! நான் உன்னிடம் பேசவில்லை என்று கூறினார்கள். அதாவது நீ தள்ளிப்போ! நான் உன்னிடம் எதுவும் பேசவும் மாட்டேன்; நீ கூறுவது எதையும் கேட்கவும் மாட்டேன் என்றார்கள்.

நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல் அவர்கள் உங்களுக்கு சத்தியமிட்டு, நீங்கள் இந்த உடல்களை பார்க்கக் கூடாது என்று கூறியுள்ளார்கள் என்று கூறினேன். இதைக்கேட்டவுடனேயே அவர்கள் நின்று விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆணை என்றதும் நின்று விட்டார்கள்.

மேலும் தன்னிடமிருந்து இரண்டு ஆடைகளைக் கொடுத்து இவ்வாறு கூறினார்கள்: இதை நான் எனது சகோதரர் ஹம்ஸாவுக்காக கொண்டு வந்துள்ளேன். ஏனெனில் எனக்கு அவர்கள் ஷஹீதான தகவல் கிடைத்து விட்டது. நீ அவர்களை இந்த ஆடையில் கஃபன் செய்து விடு.

ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் சஃபிய்யா கூறினார்கள்: எனது சகோதரர் உடல் சிதைக்கப்பட்டது எனக்குத் தெரியும். இது இறைவழியிலேயே நடந்திருக்கிறது. இறை வழியில் ஹஸ்ரத் ஹம்ஸாவோடு எவ்வாறு நடந்து கொள்ளப்பட்டதோ அதில் நாம் ஏன் திருப்தியற்றவர்களாக இருக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ் நான் பொறுமை செய்வேன். அதன் வெகுமதியை இறைவனிடம் நாடுவேன்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தாயின் இந்த பதிலைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அனைத்தையும் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், சஃபிய்யாவை தனது சகோதரரின் உடலுக்கு அருகில் செல்ல விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சஃபிய்யா முன்னால் சென்று சகோதரரின் உடலைப் பார்த்து அவர்களுக்காக துஆ செய்தார்கள். பிறகு إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن என்று கூறினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை அடக்கம் செய்யுமாறு கட்டளையிட்டார்கள்.

பிறகு அறிவிப்பில் மேற்கொண்டு இவ்வாறு கூறுகின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் ஹம்ஸாவுக்கு அவ்விரு ஆடைகளில் கஃபன் செய்தபோது அவர்களுக்கு பக்கத்தில் ஓர் அன்ஸாரி சஹாபி ஷஹீதாகி விழுந்திருப்பதைப் பார்த்தேன். ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களுடன் நடந்து கொள்ளப்பட்டதைப் போன்றே இவர்களுடனும் நடந்து கொள்ளப்பட்டிருந்தது. நாங்கள் ஹம்ஸா அவர்களுக்கு இரண்டு துணிகளில் கஃபன் கொடுத்து விட்டு அவருக்கு ஒரு துணி கூட இல்லாமல் விட்டு விடுவதை நினைத்து எங்களுக்கு வெட்கம் ஏற்பட்டது. எனவே நாங்கள் ஒரு துணியில் ஹம்ஸா அவர்களையும், மற்றொரு துணியில் அந்த அன்ஸாரி சஹாபியையும் கஃபன் செய்ய தீர்மானித்தோம். அவர்கள் இருவதில் ஒருவர் உயரமானவர் என்று எங்களுக்கு தெரிய வந்தது. நாங்கள் சீட்டுக் குலுக்கிப்போட்டு யார் பெயரில் எந்த துணி வந்ததோ அவரை அந்தத் துணியிலேயே அடக்கம் செய்து விட்டோம். பிறகும் அது முழுமையாக வரவில்லை. புல்லைக் கொண்டு மறைக்க வேண்டியதாயிற்று.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 10 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 452 முஸ்னத் சுபைர் பின் அல்அவாம், ஹதீஸ் எண் 1418 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 97 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு மிஸ்ரில் அச்சிடப்பட்டது & சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 67, சுபைர் பின் அல்அவாம் – கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் கூறுகின்றார்கள்: அகழ் போர் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குரைலாவின் செய்தியை என்னிடம் கொண்ட வருபவர் யாரேனும் உண்டா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இதோ நான் இருக்கிறேன் என்றார்கள். பிறகு மீண்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பனூ குரைலாவின் செய்தியை என்னிடம் கொண்ட வருபவர் யாரேனும் உண்டா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இதோ நான் இருக்கிறேன் என்றார்கள். மூன்றாவது முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், பனூ குரைலாவின் செய்தியை என்னிடம் கொண்ட வருபவர் யாரேனும் உண்டா? என்று கேட்டார்கள். அப்போதும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இதோ நான் இருக்கிறேன் என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒவ்வொரு நபிக்கும் சீடர் இருப்பார். எனது சீடர் சுபைர் ஆவார்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் ஒரு நபர் இவ்வாறு கூறுவதைக் கேட்டார்கள். அவர் கூறி வந்தார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சீடரின் மகனாவேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்கள் அந்த நபரிடம் நீ சுபைர் அவர்களின் சந்ததி என்றால் சரிதான்; இல்லையெனில், நீ கூறுவது தவறு என்றார்கள். அப்போது விசாரிக்கப்பட்டபோது, ஹஸ்ரத் சுபைர் அவர்களைத் தவிர வேறு ஒருவரும் கூட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சீடர் என்று அழைக்கப்பட்டு வந்தது தெரிய வந்தது.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் கூறினார்கள்: எனக்குத் தெரிந்து வேறு யாருமில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 78 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அகழ் போர் நாளன்று என்னையும் உமர் பின் சல்மா அவர்களையும் பெண்களில் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தது. நான் பார்வையை செலுத்தியபோது, ஹஸ்ரத் சுபைர் அவர்களை தமது குதிரையில் பயணித்தவாறு கண்டேன். நான் அவர்களை இரண்டு அல்லது மூன்று முறை பனூ குரைலாவை நோக்கி செல்வதைப் பார்த்தேன். பிறகு நான் திரும்பி வந்து அவர்களிடம், தந்தையே! நான் உங்களை இங்கும் அங்கும் செல்வதைக் கண்டேன் என்று கூறினேன்.

அதற்கு அவர்கள், மகனே! உண்மையிலேயே என்னைப் பார்த்தாயா? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ஆம் என்று கூறியபோது ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பனூ குரைலாவிடம் சென்று யார் செய்தியை கொண்டு வருவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். இதைக்கேட்டு நான் சென்று விட்டேன். நான் திரும்பி வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக தமது தாய் தந்தையின் பெயரை

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எனக்கு ஆதரவாக அவன் எத்தகைய அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான் என்றால், இன்றைய நாளான 1906 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16 ஆம் தேதி வரை அவற்றை ஒவ்வொன்றாக நான் எண்ணத் தொடங்கினால் அவை மூன்று இலட்சத்தையும் விட அதிகமாக இருக்கும் என்பதை இறைவன் மீது ஆணையிட்டு என்னால் கூற முடியும்.

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 72)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

ஒன்றாக கூறினார்கள். அதாவது எனது தாயும் தந்தையும் உம்மீது அர்ப்பணமாகட்டும் என்று கூறினார்கள். இவர்கள் திரும்பி வந்து தகவல் அளித்தபோது கூறினார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில், அஸ்ஹாபுன் நபி (ஸல்), பாப் மனாகிப் சுபைர் பின் அல்அவாம், ஹதீஸ் எண் 3720)

கைபர் போரில் யூதர்களின் பிரசித்தி பெற்ற தலைவன் மர்ஹப், ஹஸ்ரத் முஹம்மது பின் மஸ்லமா (ரலி) அவர்களால் கொலை செய்யப்பட்டான். பிறகு அவனது சகோதரன் யாஸிர் களத்துக்கு வந்தான். அவன் மன் யுபாரிஸ் அதாவது யார் என்னை எதிர்த்துப் போரிடுவார் என முழக்க மிட்டான். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் அவனை எதிர்க்க முன்னோக்கிச் சென்றார்கள். ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இன்று எனது மகனுக்கு ஷஹாதத் கிடைக்கும் என தெரிகிறது என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! உங்கள் மகன் அவனைக் கொன்று விடுவார் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் யாஸிரை எதிர்க்கப் புறப்பட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களால் அவன் கொலை செய்யப்பட்டான்.

(அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 334... – 1955 ஆம் ஆண்டு மிஸ்ரில் அச்சிடப்பட்டது)

காஃபிர்களுக்காக ஹஸ்ரத் ஹாதிப் பின் பல்தாவின் கடிதத்தைக் கொண்டு சென்ற அந்த பெண்ணைக் கண்டு பிடிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனுப்பிய அந்த மூன்று நபர்களில் ஒருவராக ஹஸ்ரத் சுபைர் அவர்கள் இருந்தார்கள். இதைப் பற்றி முன்னரே கூறப்பட்டு விட்டது. ஆனால் இங்கும் இது தொடர்பாக சிறிது குறிப்பிடுகின்றேன்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என்னையும், ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களையும் மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் அவர்களையும் ஓரிடத்திற்கு அனுப்பியவாறு கூறினார்கள்: ரவ்ஸா ஹாஹ் சென்றடைந்ததும், அங்கு உங்களுக்கு ஒரு பெண் கிடைப்பாள். அவளிடம் ஒரு கடிதம் இருக்கும். நீங்கள் அவளிடமிருந்து அந்தக் கடித்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி வாருங்கள்.

ஆக நாங்கள் புறப்பட்டோம். மக்காவும் மதீனாவுக்கும் இடையிலுள்ள ரவ்ஸா ஹாஹ் எனும் இடத்தைச் சென்றடைந்தோம். உண்மையிலேயே எங்களுக்கு ஒரு பெண் காணக் கிடைத்தாள். நாங்கள் அவளிடம் உன்னிடம் இருக்கும் கடிதத்தை வெளியே எடு என்றோம். அவள், தன்னிடம் எந்தக் கடிதமும் இல்லை என்று கூறினாள். நீயே கடிதத்தை வெளியே எடுத்து விடு; இல்லையென்றால், நாங்கள் கடுமையாக நடந்து கொள்வோம். இன்னும் சொல்வதென்றால் உன்னை நிர்வாணமாக்கி விடுவோம் என்றோம். மேலும் எதுவரை நாங்கள் செல்ல வேண்டியது வந்தாலும் நாங்கள் செய்வோம் என்றோம். நிர்பந்தத்திற்குள்ளாகி அந்த பெண் தனது பின்னல் முடிப்பிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து எங்களிடம் ஒப்படைத்து விட்டாள்.

நாங்கள் அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் ஆஜரானோம். அந்தக் கடிதத்தை திறந்து பார்த்தபோது, அது ஹஸ்ருத் ஹாதிப் பின் அபீ பல்தா அவர்கள் தரப்பிலிருந்து சில மக்கத்து இணை வைப்பவர்களுக்கு எழுதப்பட்ட கடிதமாக இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு தீர்ப்பைப் பற்றிய தகவல் கொடுக்கப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹாதிப் இது என்ன? நீர் என்ன செய்திருக்கின்றீர்? என்று அவர்களிடம் கேட்டபோது, அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது விவகாரத்தில் அவசரப்படாதீர்கள். நான் குரைஷிகளிடம் தொடர்பு வைத்திருக்கவில்லை. எனினும் அவர்களில் இணைந்து விட்டேன். அவர்கள் மீது ஒரு பேருபகாரம் செய்ய நினைத்தேன். நான் இந்த வேலையே காஃபிர் ஆகியோ, முர்தத் ஆகியோ அல்லது இஸ்லாத்தை ஏற்ற பிறகு நிராகரிப்பை விரும்பியவாறோ செய்யவில்லை. அவர்கள் மீது ஒரு பேருபகாரம் செய்ய நினைத்தேன். அதன் காரணமாகவே நான் செய்னே் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், உங்களிடம் அவர் உண்மையைக் கூறியுள்ளார் என்று ஹஸ்ரத் பல்தா தொடர்பாக கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் அப்போது மிகவும் கோபத்தில் இருந்தார்கள். கோபத்தில் மூழ்கியவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எனக்கு அனுமதி தாருங்கள். இந்த நயவஞ்சகனின் தலையை சீவி விடுகிறேன் என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர் பத்ர் போரில் கலந்து கொண்டுள்ளார். உமக்கு என்ன தெரியும்! அல்லாஹ் பத்ர் போரில் கலந்து கொண்டவர்களை விண்ணிலிருந்து எட்டிப் பார்த்தான். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். நான் உங்களை மன்னித்து விட்டேன் என்றான்.

(முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 251 முஸ்னத் அலி பின் அபீ தாலிப், ஹதீஸ் எண் 600 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வென்றபோது, ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் படையின் இடப்புறமும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவில் நுழைந்தபோது, மக்கா நிம்மதியடைந்த பின்னர் இவர்கள் இருவரும் அதாவது ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் மிக்தாத் (ரலி) ஆகிய இருவரும் குதிரையில் வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று தமது போர்வையால் அவர்களின் முகங்களில் படிந்துள்ள தூசியைத் துடைத்தார்கள்.

மேலும் அன்னார் கூறினார்கள்: நான் குதிரைகளுக்கு இரண்ட பாகங்களையும், அதன் மேல் பயணித்தவர்களுக்கு ஒரு பாகத்தையும் நிர்ணயித்துள்ளேன். இவர்கள் இருவருக்கும் குறைவாகக் கொடுப்பவருக்கு அல்லாஹ் குறைவாக கொடுப்பானாக.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 77 சுபைர் பின் அல்அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் அவர்களின் ஒரு சம்பவத்தைப் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுபுல் என்றழைக்கப்பட்ட சிலை மீது தனது கம்பால் அடித்தபோது, அது தனது இடத்திலிருந்து கீழே விழுந்து உடைந்து விட்டது. அப்போது, ஹஸ்ரத் சுபைர் அவர்கள் புன்சிரித்தவாறு, அபூ சுஃப்யானைப் பார்த்து, அபூ சுஃப்யான்! நினைவில் இருக்கிறதா? உஹது நாளன்று முஸ்லிம்கள் காயத்தால் உடந்துபோய் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். நீ உனது ஆணவத்தால் உஃலு ஹுபுல்; உஃலு ஹுபுல் அதாவது ஹுபுலின் மேன்மை உயரட்டும்; ஹுபுலின் மேன்மை உயரட்டும் என்று அறிவித்தாய் என்று கூறினார்கள்.

மேலும் அதுமட்டுமின்றி, ஹுபுலே உங்களுக்கு உஹது நாளில் முஸ்லிம்கள் மீது வெற்றியை வழங்கியதாகவும் கூறினாய். இன்று ஹுபுல் சிலையின் துண்டுகள் முன்னால் கிடப்பதைப் பார்க்கிறாயா? எனக் கேட்டார்கள். அதற்கு அபு சுஃப்யான், சுபைரே! இப்போது அந்த விஷயங்கள் போகட்டும். இன்று எங்களுக்கு நன்றாக தெரிகிறது. முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவனைத்தவிர வேறு கடவுள் இருந்திருந்தால், இன்று நாங்கள் பார்ப்பது ஒருபோதும் நிகழ்ந்திருக்காது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவன் மட்டுமே இறைவனாவான் என்று கூறினான்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 346, 347)

ஹுனைன் போர் நாளன்று ஹவாஸின் கோத்திரத்தின் எதிர்பாராத அம்பு எறிதலால், அத்துடன் அன்று இஸ்லாமிய படையில் ஈராயிரம் புதிய முஸ்லிம்கள் இணைந்திருந்தாலும் எப்படிப்பட்ட தருணம் வந்ததென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மைதானத்தில் தனியாக இருந்தார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கோவேறி கழுதையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

நிராகரிப்பாளர்களின் தலைவனான மாலிக் பின் அவ்ஃப் ஒரு பள்ளத்தாக்கில் குதிரை வீரர்களுடன் நின்று கொண்டிருந்தான். சில குதிரை வீரர்கள் தென்படுவதை பார்த்தபோது, இது என்ன தென்படுகிறது என மாலிக் பின் அவ்ஃப் கேட்டான். அதற்கு அவனது தோழர்கள், சில மக்கள் தங்கள் ஈட்டிகளை குதிரைகளின் காதுகளுக்கு மத்தியில் வைத்திருக்கிறார்கள் என்று கூறினர். அதற்கு அவன், இது பனூ ஹலீம் ஆவர். இவர்களால் உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று கூறினான்.

பிறகு அவர்கள் பள்ளத்தாக்கை நோக்கி சென்று விட்டார்கள். பிறகு சவாரிகளின் படை ஒன்று வெளிப்பட்டது. மாலிக் என்ன பார்க்கிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கூறினார்கள்: சில மக்கள் உள்ளனர். ஈட்டிகள் கைகளில் உள்ளன.

அதற்கு அவன், இது அவ்ஸ் மற்றும் கஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவர். இவர்களாலும் உங்களுக்கு எந்த அபாயமும் இல்லை. அவர்களும் பள்ளத்தாக்கை அருகில் சென்று விட்ட பிறகு பனூ சலீம் கோத்திரத்தினரைப் போன்றே மக்கள் வசிக்கும் பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டனர்.

பிறகு ஒரு சவாரி தென்பட்டது. இது சுபைர் பின் அவாம் என்று மாலிக் கூறினான்: லாத்தின் மீது ஆணையாக! அவர் உங்களுடன் போரிடுவார். இப்போது உங்கள் பாதங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் பள்ளத்தாக்கை சென்றடைந்ததும் அவர்கள் அவர்களைப் பார்த்தபோது ஹஸ்ரத் சுபைர் அவர்கள் பாறையைப் போன்று உறுதியாக நின்று விட்டார்கள். ஈட்டியால் எவ்வாறு தாக்கினார்கள் என்றால் அது காஃபிர் தலைவர்களை அந்த பள்ளத்தாக்கிலிருந்து காலியாக்கி விட்டார்கள்.

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 52,53 & அஸீரத்துன் நபவிய்யா லாபின் ஹிஷாம் தொகுதி 2 பக்கம் 456 வஸ்யா மாலிக் பின் அவ்ஃப்.... – 1995 ஆம் ஆண்டு மிஸ்ரில் அச்சிடப்பட்டது)

உர்வா தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: யர்மூக் போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம், நீங்கள் தாக்குதல் தொடுக்க மாட்டீர்களா? நாங்களும் உங்களுடன் இணைந்து தாக்குதல் தொடுப்போமே என்றார்கள். அதற்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள், நான் தாக்குதல் தொடுத்தால், நீங்கள் பின்வாங்கி விடுவீர்கள் என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், நாங்கள் பின்தங்கிவிட மாட்டோம் என்றார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் காஃபிர்கள் மீது எவ்வளவு வேகமாக தாக்குதல் தொடுத்தார்கள் என்றால் அவர்களின் வரிசைகளைக் கிழித்துக் கொண்டு முன்னே சென்று விட்டார்கள். இவர்கள் பார்த்தபோது, யாரும் உடன் இருக்கவில்லை. இவர்கள் பின்னால் திரும்பி பார்த்தபோது, ஒருவர் கூட இவர்கள் பின்னால் இல்லை. இவர்கள் திரும்பும்போது காஃபிர்கள் இவர்களின் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டு இவர்களின் தோளில் இரண்டு காயங்களை ஏற்படுத்தினர். அவற்றில் பத்ர் போரில் அவர்களுக்கு ஏற்பட்ட அந்த பெரிய காயமும் இருந்தது.

உர்வா கூறி வந்தார்கள்: நான் எனது விரல்களை அந்த காயங்களில்போட்டு விளையாடி வந்தேன். நான் அப்போது சிறு குழந்தையாக இருந்தேன்.

உர்வா கூறுகின்றார்கள்: அந்த நாட்களில் யர்மூக் போரில் ஹஸ்ரத் சுபைர் அவர்களுடன் அப்துல்லாஹ் பின் ஹுபைரும் இருந்தார்கள். அப்போது அவர்கள் பத்து வயதுடையவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்களை குதிரையில் அமர்த்தி கொண்டு சென்றார்கள். ஒரு நபரை அவர்களின் பாதுகாப்புக்காக நிர்ணயித்து விட்டார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி, பாப் கத்ல் அபீ ஜஹ்ல், ஹதீஸ் எண் 3975)

சிரியா வெற்றிக்குப் பிறகு ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அவர்களின் தலைமையில், எகிப்து மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. அப்பொழுது முஸ்லிம்களும், எகிப்தின் ஃபிஸ்தாத் நகரத்தை வெற்றி கண்ட ஹஸ்ரம் அம்ர் பின் ஆஸ் அவர்கள் அலக்ஸாந்தரியா மீது தாக்குதல் தொடுக்க எண்ணினார்கள். அப்பொழுது, அலக்ஸாந்தரியாவின் தெற்கில் நைல் நதிக்கரை ஓரத்தில் கூடாரங்கள் அமைத்தார்கள். எனவேதான் இதை ஃபிஸ்தாத் என அழைக்கின்றார்கள். இந்த இடமே பிற்காலத்தில் நகரமாக மாறிவிட்டது. இந்த நகரத்தின் புதிய பகுதியே இன்று கெய்ரோ தென்படுகிறது. இதை அவர்கள் சுற்றி வளைத்து விட்டார்கள். கோட்டை வலிமையையும் படையின் எண்ணிக்கையைக் குறைவையும் பார்த்து ஹஸ்ரம் அம்ர் பின் ஆஸ் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் உதவியாளர்களை அனுப்ப வேண்டினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பத்தாயிரம் பேரைக் கொண்ட படையையும், நான்கு தளபதிகளையும் அனுப்பி வைத்தார்கள். இவர்களில் ஒவ்வொரு தளபதியும் ஆயிரம் பேருக்குச் சமம் என்று கூறினார்கள். அவர்களில் ஹஸ்ரத் சுபைர் அவர்களும் ஒருவராக இருந்தார்கள். இவர்கள் சென்றடைந்தபோது அம்ர் பின் ஆஸ் அவர்கள் பணியின் ஏற்பாடுகளை இவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள். இவர்கள் குதிரையில் ஏறி கோட்டையை சுற்றி வந்தார்கள். படையை ஒழுங்குபடுத்தினார்கள். சவாரிகளையும் போர் வீரர்களையும் பல்வேறு இடங்களில் நியமனம் செய்தார்கள்.

கவண்களால் கோட்டை மீது கல்லெறிய ஆரம்பித்தார்கள். ஏழு மாதங்கள் வரை முற்றுகை தொடர்ந்தது. வெற்றி தோல்வி எதுவும் தீர்மானமாகவில்லை. ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஒரு நாள், இன்று நான் முஸ்லிம்கள் மீது அர்ப்பணமாகிறேன் என்று கூறியவாறு வாளை உருவிக்கொண்டு ஏணி அமைத்து கோட்டைச் சுவர் மீது ஏறி விட்டார்கள். கோட்டை சுவர் மீது ஏறி எல்லாரும் ஒன்றாக (தக்பீர் முழக்கமிட்டார்கள்). அவர்களுடன் படைகள் முழுவதும் எவ்வளவு உரத்த குரலில் முழக்கமிட்டார்கள் என்றால் கோட்டையின் பூமி அதிர்ந்து போனது.

முஸ்லிம்கள் கோட்டைக்குள் நுழைந்து விட்டார்கள் என்று கிறித்தவர்கள் நினைத்தார்கள். அவர்கள் தடுமாறி ஓட ஆரம்பித்து விட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கோட்டைச் சுவரிலிருந்து கீழே இறங்கி, கோட்டைக் கதவை திறந்து விட்டார்கள். படை முழுவதும் உள்ளே நுழைந்து விட்டது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

இந்தக் காலக்கட்டம் ஓர் இமாம் பிறக்க வேண்டும் என்ற தேவையை ஏற்றுக் கொள்கின்றது.

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 70–72)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

(குலாம் பாரி ஸைஃப் சாஹிப் எழுதிய ரோஷன் சிதாரே தொகுதி 2 பக்கம் 54,55 & மஜ்மவுல் பல்தான் பக்கம் 259 – 2013 ஆம் ஆண்டு லாஹூரில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வஃபாத்தின்போது, கிலாஃபத் கமிட்டியின் உறுப்பினர்களின் பெயரை முன்மொழிதல், வஃபாத்திற்குப் பிறகு கிலாஃத்தை தேர்ந்தெடுக்கும் நிகழ்வு ஆகியவை தொடர்பாக புகாரியில் இவ்வாறு இடம் பெற்றுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வஃபாத் நேரம் நெருங்கியபோது, யாரை கலீஃபாவாக ஆக்க வேண்டும் என்று வலியுறுத்திவிட்டுச் செல்லுங்கள் என்று மக்கள் கூறினர்.

அதற்கு அவர்கள், நான் இந்த கிலாஃபத்திற்கு உரியவர்களாக அந்த சில நபர்களைத் தவிர வேறு யாரையும் காணவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களிடம் திருப்தி கொண்டவர்களாக வஃபாத் ஆனார்கள். அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோரின் பெயர்களைக் கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் உமர் உங்களுடன் இணைந்திருப்பார். கிலாஃபத்தில் அவருக்கு எந்த உரிமையும் இருக்காது. கிலாஃபத் சஅத் அவர்களுக்கு கிடைத்து விட்டால் பிறகு அவர் கலீஃபாவாக இருப்பார். இல்லையென்றால் உங்களில் யார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும்ட அவர் சஅத் அவர்களிடம் உதவி பெற்று வரட்டும். ஏனெனில் அவர்களால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை என்பதற்காகவோ, அவர்கள் நம்பிக்கை துரோகம் செய்தார்கள் என்பதற்காகவோ அவர்களை பணி நீக்கம் செய்யவில்லை.

அவர்கள் மேலும் கூறினார்கள்: எனக்குப் பிறகு வரப்போகும் அந்த கலீஃபாவுக்கு நான் முதலில் முஹாஜிர்கள் தொடர்பாக வலியுறுத்திக் கூறுகிறேன். அவர்களுடைய உரிமைகளை அவர்களுக்கு கொடுங்கள். அவர்களின் கண்ணியத்தை கருத்தில் கொள்ளுங்கள். நான் அன்ஸார்களுடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு வலியுறுத்திக் கூறுகிறேன். அவர்கள் முஹாஜிர்களுக்கு முன்னால் தங்கள் வீடுகளில் ஈமானுக்கு இடமளித்தார்கள். அவர்களில் நற்செயல் புரிபவர் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவர்களில் தவறிழைப்பவர்கள் மன்னிக்கப்பட வேண்டும்.

மேலும், நகரவாசிகள் அனைவருடனும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு அவருக்கு வலியுறுத்திக் கூறுகிறேன். ஏனெனில் அவர்கள் இஸ்லாத்தின் அடைக்கலம் ஆவர். பொருள் வசூலித்தவர்கள். பகைவர்கள் கவலையடைய காரணமானவர்கள். மேலும் அவர்களின் விருப்பத்துடன் அவர்களிடம் எஞ்சியிருப்பதை மட்டுமே பெற வேண்டும் என்றும் நான் வலியுறுத்திக் கூறுகிறேன். மேலும் நான் அவருக்கு காட்டரபிகளோடு நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறும் வலியுறுத்திக் கூறுகிறேன். ஏனெனில் அவர்கள் அரேபியர்கள் வேர் ஆகவும், இஸ்லாத்தின் மூலப்பொருளும் ஆவர்.

அவர்களுக்குப் பலனளிக்காத செல்வத்திலிருந்தே சந்தா பெற வேண்டும். பிறகு அவர்களின் தேவையுடையவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும். நான் அவரை அல்லாஹ் மற்றும் அவனது தூதர் பொறுப்பில் விடுகிறேன். யாரிடம் உடன்படிக்கைப் பெறப்பட்டதோ அவர்களின் உடன்படிக்கைகள் அவர்களுக்குப பூர்த்தியாக்கப்பட வேண்டும். அவர்களைப் பாதுகாக்க அவர்களுக்குத் தற்காப்பு அளிக்க வேண்டும். அவர்களிடமிருந்தும் அவர்களின் சக்திக்கு உட்பட்டே பொருள் பெற வேண்டும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணமடைந்த பிறகு அவர்களை நல்லடக்கம் செய்யப்பட்ட பிறகு இவ்வாறு கூறப்படுகிறது. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறிய ஆறு பேர் ஒன்று கூடினார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் கூறினார்கள்: உங்கள் விவகாரத்தை உங்களில் மூவரிடம் ஒப்படைத்து விடுங்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எனது அதிகாரத்தை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்குக் கொடுத்து விட்டேன். மேலும் ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்கள் கூறினார்கள்: நானும் எனது அதிகாரத்தை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குக் கொடுத்து விட்டேன்.

ஹஸ்ரத் சஅத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் எனது அதிகாரத்தை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களுக்கு கொடுத்து விட்டேன். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம், உங்கள் இருவதில் யார் இதை விட்டு விலகி விடுவாரோ, நாங்கள் அவரிடமே இந்தப் பொறுப்பை ஒப்படைத்து விடுவோம். அல்லாஹ்வும் இஸ்லாமும் அவரைக் கண்காணிப்பார்கள். அவர் உங்களில் சிறந்தவரையே தேர்ந்தெடுப்பார்.

இதைக் கேட்டு இரண்டு சான்றோர்களும் மவுனமாக இருந்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள், நீங்கள் இந்த பொறுப்பை என்னிடம் ஒப்படைக்கின்றீர்களா? அல்லாஹ் எனது கண்காணிப்பாளன். உங்களில் சிறந்தவரைத் தேர்வு செய்வதில் எந்தக் குறைவும் வைக்க மாட்டேன் என்றார்கள். அவர்கள் இவருவம், சரி என்று கூறினார்கள்.

பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள், இவருரில் ஒருவரின் கையைப் பிடித்து தனியே சென்றார்கள். மேலும் அவர்களிடம், உங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோடு உறவு முறை இருக்கிறது. இஸ்லாத்திலும் எந்த அந்தஸ்து இருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். அல்லாஹ் உங்களுடைய கண்காணிப்பாளன் ஆவான். எனவே நீங்களே கூறுங்கள். நான் உங்களை அமீராக ஆக்கினால் நீங்கள் கண்டிப்பாக நீதியுடன் நடப்பீர்களா? நான் உஸ்மான் அவர்களை அமீராக ஆக்கினால் நீங்கள் அவரது பேச்சைக் கேட்பீர்களா? மேலும் அவர்களின் கட்டளைக்கு செவிமடுப்பீர்களா? பிறகு, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள், மற்றவரை தனிமையில் அழைத்துச் சென்றார்கள். அவர்களிடமும் அவ்வாறே கூறினார்கள்.

அவர்கள் உறுதியான வாக்குதியை பெற்ற பிறகு ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களிடம், உஸ்மானே! உங்கள் கைகளை நீட்டுங்கள் என்று கூறினார்கள். பிறகு அவர்களிடம் பைஅத் செய்தார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அவர்களிடம் பைஅத் செய்தார்கள். வீட்டில் இருந்தவர்கள் உள்ளே வந்து ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்)... ஹதீஸ் எண் 3700)

எவ்வாறிருப்பினும் இந்த விளக்கத்தை நான் சில காலங்களுக்கு முன்னால் கூட எடுத்துரைத்திருக்கிறேன். இங்கும் அவர்கள் தொடர்பில் அதை எடுத்துக்கூறி விட்டேன். ஹஸ்ரத் சுபைர் அவர்களின் நற்குறிப்பு தொடர்கிறது. இனி வரும் நாட்களில் எஞ்சிய விஷயங்களை எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

சில அடையாளங்கள் எப்படிப்பட்டவை என்றால் அவற்றில் அவன் நிச்சயமாக உம்மை இழிவுபடுத்த நாடுபவரை நான் இழிவுபடுத்துவேன் என்ற தனது வாக்குறுதிக்கேற்ப என் மீது தாக்குதல் நடத்துபவர்களை இழிவிற்கும் அவமானத்திற்கும் ஆளாக்கியுள்ளான்.

(ஹகீகத்துல் வஹி ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 72)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

இப்பொழுது, ஜனாஸா தொழுகை தொடர்பாக எடுத்துக் கூறுவேன். முதலாவது ஜனாஸா, மதிப்பிற்குரிய மிஃராஜ் அஹ்மது சாஹிப் ஷஹீது அவர்களுடையதாகும். இவர்கள் மஹ்மூத் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் ஆவார்கள். பெஷாவர் மாவட்டத்தின் டோக்ரி கார்டனைச் சார்ந்தவர் ஆவார்கள். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் 12 ஆகஸ்ட் அன்று இரவு 9 மணிக்கு இவர்களின் மருந்தகத்திற்கு முன்னால் வைத்து துப்பாக்கியால் சுட்டு இவர்களை ஷஹீதாக்கி விட்டனர். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

இதன் விவரம் இவ்வாறாகும். மர்ஹூம் தமது மருந்தகத்தில் பணியை முடித்துவிட்டு இரவு 9 மணிக்கு வீட்டுக்குப் புறப்பட்டார்கள். அப்பொழுது அடையாளம் தெரியாத நபர்கள், துப்பாக்கியால் சுட்டுவிட்டு சம்பவ இடத்தை விட்டு ஓடி விட்டனர். ஷஹீது மர்ஹூம் அவர்கள் மீது இரண்டு குண்டுகள் பாய்ந்தன. அதனால் சம்பவ இடத்திலேயே அன்னார் வஃபாத்தாகி விட்டார்கள்.

ஷஹீதானபோது அன்னாருக்கு ஏறக்குறைய 61 வயதிருந்தது. ஷஹீது மர்ஹூமின் மகன் அன்பிற்குரிய யாஸிர் அஹ்மத் சம்பவத்திற்கு சில நிமிடங்கள் முன்னரே கடையிலிருந்து வீட்டிற்குப் புறப்பட்டிருந்தார்கள். மர்ஹூம் அவர்களின் மொபைல் மூலமாகவே மகனுக்கு சம்பவத்தைப் பற்றி தகவல் தெரிவிக்கப்பட்டது. மகன் மீண்டும் மருந்தகம் வந்தடைந்தபோது மர்ஹூமின் வஃபாத் நிகழ்ந்து விட்டிருந்தது.

ஷஹீது அவர்களின் குடும்பத்தி அஹ்மதிய்யத் இவர்களின் தந்தை வழிப்பாட்டனார் மதிப்பிற்குரிய அஹ்மது குல் சாஹிப் மற்றும் அவர்களது சகோதரரான மதிப்பிற்குரிய குல் சாஹிப் அவர்கள் மூலமாக 1912 ஆம் ஆண்டு வந்தது. அவர்கள் பஷ்த்தா மொழியில் புகழ்பெற்ற கவிஞராகவும் இருந்தார்கள். இந்த குடும்பத்தின் தொடர்பு ஷேக் முஹம்மது லாஹூரி அவர்களோடு இருந்தது. பிறகு இந்தக் குடும்பம் பைஅத் செய்யாதவர்களோடு அதாவது நாம் லாஹூரி ஜமாஅத் என்றும் சொல்லும் அவர்களோடு தொடர்பில் இருந்தது. கிலாபத்திடம் பைஅத் செய்யவில்லை.

மதிப்பிற்குரிய மிஃராஜ் சாஹிப் அவர்கள் தமது மூன்று சகோதரர்களுடன் 1990–91 ல் பைஅத் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பைஅத் செய்தவர்களில் இணைந்து கொண்டார்கள். அதற்குப் பிறகு அவர்களுடைய ஷஹாதத் வரை எதிர்ப்பு தொடர்ந்து இருந்து வந்தது. அவர்களிடம் பணியாற்றும் ஊழியர்களும் கூட மார்க்க எதிர்ப்பின் காரணமாக அவர்களிடம் பணியாற்ற ஆயத்தமாக இருக்கவில்லை. சமூக ஊடகத்தில்கூட கடந்த சில காலங்களாக கடுமையான எதிர்ப்புக்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ரப்வாவின் தாஹிர் நஸீம் கொலை செய்யப்பட்டதால் இதே பின்னனியில் அந்த பகுதியில் இவ்வாறு துணிகரமான முறையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதாவது, பெருநாளுக்குப் பிறகு காதியானிகளுக்கு எதிராக முழுமையான திட்டம் வகுக்கப்படும்; அவர்களை இப்பகுதியிலிருந்தே ஒழித்து விடுவோம் என்று கூறி வந்தனர். அடுத்த இலக்காக ஷஹீத் மர்ஹூம் அவர்கள் வசித்து வந்த அந்தப் பகுதி இருந்தது.

ஷஹீத் மர்ஹூம் அவர்கள் பல சிறப்பம்சங்களுக்கு உரிமை படைத்தவர் ஆவார்கள். வீட்டில் முறையாக ஜமாஅத்தான தொழுகைக்கான ஏற்பாடிருந்தது. கிலாஃபத்தின் மீது அளவு கடந்த பற்று இருந்தது. MTA வில் குத்பா கேட்பதற்கு சிறப்பான ஏற்பாடு செய்து வந்தார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது மட்டுமின்றி விருந்தோம்பல், படைப்பினங்கள் மீதான அனுதாபம், ஏழைகளுக்கு உதவுதல் போன்ற பண்புகள் அவர்களிடம் இருந்தன. தேவையுடையவர்களுக்கு இலவசமாக மருந்துகளை வழங்கி வந்தார்கள். குடும்பத்தில் ஒவ்வொரு நபருடனும் அனுதாபத் தொடர்பு இருந்தது. சகோதரர்களின் குடும்பங்களோடு மிகவும் அன்பின் தொடர்பு இருந்தது. அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்ட பிறகு சகோதரர்களுடன் இருந்த அந்த அன்பு மேலும் அதிகரித்து விட்டது. மிக வேகமாக இறைவன் பால் அழைக்கும் பணியை மேற்கொண்டு வந்தார்கள். தஹ்ரீகே ஜதீதின் புதிய நிதி ஆண்டுக்கான அறிவிப்பு சந்தர்ப்பத்தில் பொறுப்பாளர்கள் நடப்பு ஆண்டின் வாக்குறுதிக்காக இவர்களை அணுகும்போது இவர்கள் பையில் கை விடுவார்கள். அதில் இருக்கும் பணத்தை சந்தாவாக கொடுத்து விடுவார்கள். இந்த வருடமும் இவர்கள் இதையே செய்தார்கள்.

இவர்களது மகன் யாஸிர் 2012 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா ஹிஜ்ரத் செய்து விட்டார். 2013 ஆல் ஷஹீத் அவர்களும் ஆஸ்திரேலியாவுக்கு தன் மகனிடம் சென்று விட்டார்கள். ஆனால் 2014 ஆம் ஆண்டு தமது மகனை அழைத்துக் கொண்டு பாகிஸ்தான் திரும்ப வந்து விட்டார்கள்.

எனது பகுதியில், நாட்டில் இருந்து கொண்டு ஏழை பொது மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்பது எனது ஆசை. நாட்டுப்பற்று நான் பாகிஸ்தானில் இருக்குமாறு என்னை நிர்பந்திக்கிறது என்று கூறி வந்தார்கள்.

நான் ஆஸ்திரேலியா சுற்றுப்பயணம் சென்றபோது, அப்பொழுது அவர்கள் என்னை சந்திக்கவும் செய்தார்கள். நீண்ட காலமாக பெஷாவர் ஜமாஅத்தின் விருந்தோம்பல் செயலராக இருந்தார்கள். அஹ்மதிகளோ நாட்டுப் பற்றுக்கு எல்லா தியாகங்களுக்கும் ஆயத்தமாக இருக்கிறார்கள். மேலும் நாட்டின் பெயர்தாங்கி குத்தகைக்காரர்களாக ஆகியிருக்கும் இவர்கள், அஹ்மதிகள் மீது அவதூறு சுமத்துவது, இழப்பை ஏற்படுத்துவது ஆகியவற்றைத் தவிர இவர்களுக்கு வேறு வேலை இல்லை.

எவ்வாறிருப்பினும், அஹ்மதிய்யத்தின் இயல்பில் இருப்பவர்கள் அதற்கு ஏற்பவே பணியாற்றுவார்கள். நீண்ட காலமாக ஜமாஅத்தில் விருந்தோம்பல் செயலராக இருந்தார்கள். வஃபாத் வரை இந்தப் பொறுப்பில் அவர்களுக்குத் தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது. கடந்த ரமலானில் இஃதிகாஃபும் இருந்தார்கள்.

இவர்களுக்கு முன்பே இவர்களின் ஒரு சகோதரரான ஃபாரூக் அஹ்மது சாஹிப் அவர்கள் ஒரு சாலை விபத்தில் வஃபாத்தாகி விட்டார்கள். இன்னொரு சகோதரரின் கடை இவர்களுக்கு அருகாமையிலேயே இருக்கிறது. அவர்களுக்கும் அபாயமே இருந்து வருகிறது. மிரட்டல்கள் விடப்பட்டு வருகின்றன. ஷஹீத் மர்ஹூம் தமக்குப் பின்னால் தமது மனைவி மதிப்பிற்குரிய ரஷீதா மிஃராஜ் சாஹிபா மற்றும் மூன்று மகன்கள் அதாவது 27 வயதான யாஸிர், 25 வயதான முஸவ்விர், 14 வயதுடைய ஜாஸிப் மற்றும் ஆக்ஷக்ஷளு படித்து வருகின்ற ஆயிஷா என்ற ஒரு மகளையும் விட்டுச் சென்றுள்ளார்கள்.

ஜாஸிப்புக்கும் தனது பள்ளிக்கூடத்தில் அதிக எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியதுள்ளது. அல்லாஹ் இந்தப் பிள்ளைகளையும் தீயவர்களின் தீமையிலிருந்து பாதுகாப்பாக வைப்பானாக. இன்றைய நாட்களில் மீண்டும் பாகிஸ்தானில் எதிர்ப்பு தீவிரமாக உள்ளது. மாறாக, சட்டமன்ற உறுப்பினர்களும்கூட பொய்யான விஷயங்களை நம்மோடு தொடர்புபடுத்தி பொது மக்களின் உணர்வுகளைத் தூண்டிவிட முயற்சி செய்கின்றனர். தவறான வகையில், ஜமாஅத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாத மக்களின் தவறான செய்கைகள் முன் வைக்கப்பட்டு அவர்கள் அஹ்மதிகள் என்று பிரகடனம் செய்யப்படுகிறது. ஆனால் அந்தச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஜமாஅத்தோடு எந்தத் தொடர்பும் இல்லை.

இவ்வாறே இன்றைய நாட்களில் மலிவான வகையில் புகழைப் பெறுவதற்காக ஒவ்வொரு கீழ்த்தரமான மனிதர்களும் லுடிரவரநெ ல் ஜமாஅத்துக்கு எதிராகத் தமது நிகழ்ச்சிகளை உருவாக்கித் தவறான விஷயங்களை தொடர்புபடுத்திக் கூறி தாம் மிகவும் நற்கூலிக்கான பணியை செய்வதாக நினைக்கின்றனர். ஆனால் எல்ல எண்ணமுடையவர்கள் அல்ல. இவர்கள் தமது மலிவான புகழையே விரும்புகின்றனர். அல்லாஹ் இந்தத் தீயவர்களின்

தீமையை அவர்கள் மீதே திருப்புவானாக. இந்த நாட்களில் குறிப்பாக பாகிஸ்தான் ஜமாஅத்தும் உலகில் மற்றவர்களும் நாம் அனைவரும் மிக அதிகமாக துஆக்கள் செய்ய வேண்டும்.

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ رَبِّ فَاحْفَظْنِيْ وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

اَللّٰهُمَّ اِنَّا نَجْعَلُكَ فِيْ نُحُوْرِهِمْ وَنَعُوْذُبِكَ مِنْ شُرُوْرِهِمْ

இந்த துஆக்களை அதிகமாக செய்யுங்கள். அதிகமாக சலவாத் ஓதுங்கள்.

இந்தத் தீயவர்களின் தீமைகளிலிருந்து அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதியையும் பாதுகாப்பாக வைப்பானாக. இந்தப் பகைமை அதிகரிக்க அதிகரிக்க நாம் அதிகம் அதிகமாக அல்லாஹ்வின் பக்கம் குனிய வேண்டும்.

ஷஹீத் அவர்களின் மகன் யாஸிர் சாஹிப் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளால் எனது தந்தையார் மூஸியாக இருந்தார்கள். சந்தா செலுத்துவதில் எப்பொழுதும் முந்திக் கொண்டு கலப்பற்ற முறையில் பங்கு பெற்று வந்தார்கள். இதைத்தவிர்த்து மக்களைப் பற்றியும் கவலைப்பட்டு வந்தார்கள். பொருளாதார உதவி செய்து வந்தார்கள். எனது தந்தையார் மிகவும் வீரமிக்கவராகவும் தைரியமான மனிதராகவும் இருந்தார்கள். எதிர்ப்பு இருந்தும்கூட எப்போதும் அச்சமின்றி இருப்பார்கள். அல்லாஹ்வையே நம்புவார்கள். எப்பொழுதுமே, எனக்கு எந்த எதிர்ப்பை பற்றியும் கவலை இல்லை; என் இறைவன் என்னுடன் இருக்கின்றான் என்றே கூறி வருவார்கள்.

அவர்களது மகன் கூறுகின்றார்கள்: மிகவும் எளிமையான தன்னடக்கமிக்க மற்றும் வள்ளல்தன்மை கொண்ட மனிதராக இருந்தார்கள். எப்பொழுதும் திறந்த மனதோடு மக்களுக்கு உதவி செய்து வந்தார்கள். மிகவும் இறையச்சமுடையவராக இருந்தார்கள். இறைவனை நினைவு கூர்வதில் மூழ்கியிருப்பவர்களாகவும், அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பும், நம்பிக்கையும் கொள்ளக்கூடியவர்களாக இருந்தார்கள். தொழுகையை பேணுவது, தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக தொழுவது ஆகியவை வழக்கமாக இருந்தன. காலையும் மாலையும் திருக்குர்ஆன் ஓதி வந்தார்கள். தமது பிள்ளைகளுக்கு அதை செய்யுமாறு வலியுறுத்தியும் வந்தார்கள். இம்முறை ரமலானில் இவர்கள் இஃதிகாஃபும் அமர்ந்தார்கள்.

ஆஸ்திரேலியாவின் அமீர் சாஹிப் அவர்களும் இவ்வாறே கூறியுள்ளார்கள். மேலும் இதேபோன்று அங்கு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் மக்களும் எழுதியுள்ளனர். இவர்கள் இங்கு ஆஸ்திரேலியாவில் இருந்த காலம் வரை ஜமாஅத்திற்காக மிகவும் செயல் துடிப்புள்ள உறுப்பினராகத் திகழ்ந்தார்கள். மிகவும் நன்றாக பழகுபவர்களாகவும், அன்பு செலுத்தக் கூடியவர்களாகவும், அதிகமாக விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களாகவும், பணிவானவர்களாகவும் இருந்தார்கள். மிகவும் தைரியமான உத்வேகமான அஹ்மதியாகத் திகழ்ந்தார்கள். மிகக்குறைவாக பேசக் கூடியவர்களாகவும், மென்மையான உள்ளம் படைத்தவர்களாகவும் இருந்தார்கள்.

இவர்கள் திரும்பிச் செல்ல தீர்மானித்தபோது, பாகிஸ்தானில் மோசமான நிலைமையின் காரணமாக நண்பர்கள் அவர்களை தடுத்தார்கள். பிள்ளைகளும் தடுத்தார்கள். ஆனால் அவர்களோ ஜமாஅத்தின் வழியில் உயிர் சென்று விட்டால் அதை விட அதிகம் நற்பாக்கியம் வேறென்ன இருக்க முடியும். இது கண்ணியமாக இருக்கும் என்று கூறினார்கள். பிறகு திரும்பிச் சென்று விட்டார்கள்.

மெல்போர்னின் அன்ஸாருல்லாஹ் ஸயீம் சாஹிப அவர்கள் கூறுகின்றார்கள்: ஷஹாதத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு எனக்கு அவர்களின் தொலைபேசி அழைப்பு வந்தது. அவர்கள் என்னிடம், எதிர்ப்பு அதிகரித்து விட்டது. ஆனால் நான் அஞ்சக்கூடியவன் இல்லை என்றார்கள்.

இரண்டாவது ஜனாஸா இயக்கத்தின் முரப்பி அதீப் அஹ்மத் நாஸிர் சாஹிப் அவர்களுடையதாகும். இவர்கள் நார்வேல், ஏதீபூரைச் சேர்ந்த முஹம்மத் நாஸிர் டோகர் சாஹிப் அவர்களின் மகனாவார். 9 ஆகஸ்ட் அன்று 27 வயதில், சிறிது காலம் நோயுற்றிருந்த பிறகு வஃபாத் ஆகிவிட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் ஜாமிஆவில் அனுமதி பெற்றார்கள். ஜூலை 2017 ஆம் ஆண்டு ஜாமிஆவில் படிப்பை முடித்தார்கள். செயல் களத்திற்கு வந்து உள்ளூர் இஸ்லாஹ் வ இர்ஷாத்தின்கீழ் பணி புரிந்து வந்தார்கள். இவர்களின் திருமணமும் நிச்சயிக்கப்பட்டிருந்தது. திருமணம் நடக்கவிருந்தது. ஆகஸ்ட் 9 அன்று இவர்களுக்கு காய்ச்சல் வந்தது. Typhoid ஏற்பட்டது. பிறகு கூலயீமாடினை சென்று தலை வீக்கத்தை உண்டாக்கும் நோய் வந்து விட்டது. இந்த தருணத்தில் அவர்கள் கவனமாக இருக்கவில்லை. தமது பணியையும் செய்து வந்தார்கள். பயணமும் செய்து வந்தார்கள். எவ்வாறிருப்பினும் 2,3 நாட்கள் சிறிதளவு நோய்வாய்ப்பட்டிருந்த பிறகு இந்தக் காய்ச்சல் காரணமாக இவர்களின் வஃபாத் நிகழ்ந்து விட்டது.

இவர்களின் தந்தை நாஸிர் டோகர் சாஹிப் கூறுகின்றார்கள்: எனது மகன் வாழ்க்கையை அர்ப்பணித்தவன் என்ற வகையில் பெற்றோர்களாகிய எங்களின் பெருமிதத்திற்கு காரணமாக இருந்தான். மிகவும் நல்ல மற்றும் நற்பண்புள்ள மகன் ஆவான். தொழுகை மற்றும் நோன்பை பேணக்கூடியவன் ஆவான். எளிய இயல்பை உடையவன். மென்மையாகப் பேசக்கூடியவன். முகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்பு இருந்தது. இந்த சிறப்புகளை இவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த முரப்பிமார்களான இவர்களின் நண்பர்களும் எழுதியிருக்கின்றனர். எப்பொழுதும் புன்சிரிக்கக் கூடியவராக இருந்தார். ஜமாஅத்தின் அன்பு மற்றும் தொண்டுக்ககு அதிகம் உணர்வு கொண்டவர்களாக இருந்தார்கள். எல்லாருக்கும் பிடித்தமானவராக இருந்தார்கள்.

இன்றைய நாட்களில் இவர்கள் தொண்டு செய்ய நல்வாய்ப்பு பெற்றிருந்த சீனே ஜமாஅத்தில், அங்கு பணியமர்த்தப்படுவதற்கு முன்னரே பைத்துல் ஸிக்ர் மற்றும் முரப்பி ஹவுஸ் கட்டுவதற்கு மிகவும் உத்வேகத்துடனும் உணர்ச்சியுடனும் பணி புரிந்து வந்தார்கள். தனது மாதாந்திர வருமானத்திலிருந்து தொகையை ஒன்றுதிரட்டி (மிகக்குறைவான வருமானம்தான் இருக்கும்) 30000 ரூபாய் பள்ளி கட்டுவதற்காக அனுப்பி வைத்தார்கள். பணியைத் துவங்குமாறு மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்தார்கள். எப்பொழுதுமே அவர்கள் வாயிலிருந்து வேலையைத் துவங்குங்கள். அல்லாய் அருள் செய்வான் என்ற சொற்களையே கேட்டுள்ளோம்

இவர்களின் தாயார் நாஸிரா சாஹிபா கூறுகின்றார்கள்: அதீப் பிறந்த தினம் எங்களுக்கு மகிழ்ச்சிக்குரிய நாளாக இருந்ததன் காரணம், நாங்கள் அவனை இறைவழியில் அர்ப்பணிந்திருந்தோம். 4 மகள்களுக்குப் பிறகு இறைவன் மகனைத் தந்தவுடன் மகிழ்ச்சிக்கு எல்லையே இருக்கவில்லை. இவன் பெரியவனாகி முரப்பி ஆவான் என்ற மகிழ்ச்சியிருந்தது. இரண்டாவது மகிழ்ச்சிக்குரிய நாள், எங்களை ஜாமிஆவிற்கு அழைத்து அதீபுக்கு ஷாஹித் சான்றிதழ் வழங்கியபோது ஏற்பட்டது. மிகவும் நல்ல, கட்டுப்படக்கூடிய மகனாக இருந்தார்.

பணி செய்யும் களத்திலிருந்து எப்போதும் போன் செய்து மருந்துகள் தொடர்பாக கேட்பார். தாயின் உடல் நிலையைப் பற்றி கேட்பார். எப்பொழுதும் உடல் நலத்தைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறுவார். இறைவனுக்கு மிகவும் அஞ்சக்கூடியவராக இருந்தார். ஜமீன்தார் குடும்பம் என்பதால் கோதுமை விளைச்சல் பருவம் வரும்பொழுது தனது தாயிடம், கோதுமை அதிகம் வையுங்கள். ஏனெனில் தேவையுடைய மக்களும் வருவார்கள். ஏழைகளுக்கு உதவவும் வேண்டும். அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று கூறுவார்.

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 24 Sep 2020 Issue No. 39

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஏதிபூரின் ஒரு ஜமாஅத் சீனேவில் ஓர் அறை மட்டும் இருந்த ஓர் இடமிருந்தது. அங்கு முழுமையான பொருட்கள் இல்லாத நிலையிலும் மிகவும் துணிச்சலுடன் பணியாற்றி வந்தார்கள்.

பைஸிலாபாத் மாவட்டத்தின் முரப்பி ஜாவீத் லன்கா சாஹிப் எடுத்துரைக்கின்றார்கள்: மர்ஹூம் வக்ஃபின் உண்மையனான ஆன்மாவைப் புரிந்தவாறு வாழ்க்கையை கழிக்கக்கூடியவராக இருந்தார். மிகவும் கடின உழைப்புடன் பணியாற்றி வந்தார். ஜமாஅத்திற்கு நல்ல தர்பிய்யத் வழங்குவதுடன் பொறுப்பாளர்களுக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு நல்கி வந்தார். Clip களை குறிப்பாக ஜமாஅத் அன்பர்களுக்கு காட்டி வந்தார். யாரிடமாவது ஏதாவது குறையை பார்த்தால் அவரது சுய மரியாதையயைக் கருத்திற் கொண்டு தனியாக அழைத்துச் சென்று புரிய வைப்பார். ஒவ்வொருவருக்கும் உதவுவார். கிலாஃபத் மீது அன்பு, ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுதல், நன்றாக பழகுதல், நல்லொழுக்கம், மென்மையான இயல்பு, பணிவு மற்றும் தன்னடக்கம் ஆகிய பண்புகள் வெளிப்படையாகத் தெரிந்தன.

மிகவும் ஒழுக்கமுடையவராகவும், எந்நிலையிலும் இறைவனின் விருப்பத்தில் தன்னிறைவு பெறக்கூடியவராகவும் இருந்தார்கள். அல்லாஹ் இவர்களின் தாய் மற்றும் தந்தைக்கு நிம்மதியையும் பொறுமையையும் வழங்குவானாக. சகோதரிகளுக்கும் தைரியத்தை வழங்குவானாக. மர்ஹூம் அவர்களுடன் பாவ மன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக.

மூன்றாவது ஜனாஸா மதிப்பிற்குரிய ஹபீத் அஹ்மத் ஷேக் சாஹிப் அவர்களுடையதாகும். அவர்கள் சேக் முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகனாவார். 12 ஆகஸ்ட் என்று மாரடைப்பின் காரணமாக 85 வது வயதில் இவர்களுக்கு வஃபாத் ஏற்பட்டது. اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رٰجِعُوۡن

இவர்கள் ஹஸ்ரத் ஷேக் நூர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகன் வழிப் பேரன் ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியாக இருந்தார்கள். இவர்களின் தந்தை மதிப்பிற்குரிய சேக் முஹம்மத் ஹுஸைன் சாஹிப் அவர்கள் சினியோட் ஜமாஅத்தின் அமீராகத் தொண்டாற்றும் நற்பேற்றைப் பெற்றார்கள். பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் சேக் நூர் அஹ்மது சாஹிப் அவர்களிடம் உங்களது இரு மகன்களையும் கல்வி கற்பதற்காக காதியான் அனுப்புமாறு வழிகாட்டல் வழங்கினார்கள்.

மதிப்பிற்குரிய ஹமீத் அஹ்மத் ஷேக் சாஹிப் அவர்களின் தந்தை ஷேக் முஹம்மத் ஹுஸைன் சாஹிப் அவர்கள் காதியானில் பத்தாம் வகுப்பு வரை முடித்தார்கள். அங்கு அவர்களுக்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வகுப்புத் தோழராக இருக்கும் கண்ணியமும் கிடைத்தது.

ஹமீத் அஹ்மத் சேக் சாஹிப் அவர்களின் தாய் வழிப்பாட்டனார் ஹஸ்ரத் மவ்லவி அப்துல் காதிர் சாஹிப் லூதியானவி அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் 313 சஹாபாக்களில் ஒருவராக இருந்தார்கள். ஹமீத் ஷேக் சாஹிப அவர்களின் திருமணம் கபூர்தலாவின் ஹஸ்ரத் முன்ஷி ஸஃபர் அஹ்மத் சாஹிப் அவர்களின் மகன் வழிப்பேத்தியுடன் நடந்தது.

மதிப்பிற்குரிய ஹமீத் ஷேக் சாஹிப் அவர்கள் Charted Account ஆக இருந்தார்கள். தமது கல்வியை இலண்டனில் 1973 ஆம் ஆண்டு முழுமை செய்தார்கள். ரஷீது அஹ்மது சாஹிப் அவர்கள் இன்சார்ஜாக இருக்கும் நமது விம்பில்டன்னைச் சார்ந்த ரஷீத் அஹ்மத் சாஹிப் அவர்கள் இவர்களின் சகோதரர் ஆவார்கள்.

மர்ஹூம் தமக்குப் பின்னால் இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளை விட்டுச் சென்றுள்ளார்கள். மர்ஹூமின் ஒரு மகன் அப்துர் ரஸ்ஸாக் ஷேக் சாஹிப் இங்கு இருக்கக்கூடிய நமது ஐஹஹஹநு ல் துணை சேர்மனாக இருக்கின்றார்கள்.

அப்துர் ரஸ்ஸாக் ஷேக் சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: எனது தந்தை ஓர் அன்பு செலுத்தக்கூடிய, பற்று கொண்ட மகனாக இருந்தார்கள். பற்றுறுதி கொண்ட மகனாகவும், கணவராகவும், தந்தையாகவும், பாட்டனாராகவும் திகழ்ந்தார்கள். குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் அவர்களோடு அன்பு கொண்டிருந்தார்கள். இவர்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மிக நல்ல, கலப்பற்ற நபராக இருந்தார்கள்.

எப்பொழுதும் எவ்வகையிலும் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றும் சந்தர்ப்பத்தை கைநழுவ விடமாட்டார்கள். காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதுவார்கள். தமது பிள்ளைகளிடமும் கடிதம் எழுதுமாறு கூறுவார்கள். எல்லா இடத்திலும் பிள்ளைகளுக்கு உள்ளூர் ஜமாஅத்தோடு தொடர்பு கொண்டிருக்குமாறு வலியுறுத்தி வந்தார்கள். மேலும் மீண்டும் மீண்டும் இது தொடர்பாக கூறி வந்தார்கள். ஜமாஅத்தான தொழுகையை பேணுபவர்களாக இருந்தார்கள். பிள்ளைகளுக்கும் கவனமூட்டி வந்தார்கள். ஜமாஅத்தின் பொருள் தியாகங்களில் அதிகம் அதிகமாக பங்கு பெறக்கூடியவர்களாக இருந்தார்கள்.

மிகவும் அழுத்தம் கொடுத்து தமது வஃபாத்திற்கு இரு வாரங்களுக்கு முன்னர் தமது அனைத்து மீதத் தொகையையும் செலுத்தி விட்டார்கள். நைஜீரியாவிலும் இவர்கள் இருந்திருக்கின்றார்கள். அங்கும் பள்ளிவாயில்கள் மற்றும் பிரச்சார நிலையங்களின் நிலங்களில் தமது வருமானத்திற்கேற்ப உதவி செய்து வந்தார்கள். நைஜீரியாவை விட்டு வந்தபோது, தமது வாகனத்தை அங்கு ஜமாஅத்திற்கு அன்பளிப்பாக வழங்கிவிட்டு வந்தார்கள். பாகிஸ்தானில் வசித்த காலத்தில் இஸ்லாமாபாதில் ஐஹஹஹநு ன் ஊாயசைஅயுஜ ஆக தொண்டாற்றி வந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் பல்வேறு இடங்களில் இவர்களுக்கு தொண்டாற்றும் நற்பாக்கியம் கிடைத்தது. அல்லாஹ் இவர்களின் பிள்ளைகளுக்கும் இவர்களின் நன்மைகளைத் தொடச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக. மர்ஹூமுடன் கருணையுடனும், பாவ மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. பதவிகளை உயர்த்துவானாக. ஜுமுஆவிற்குப் பிறகு இவர்களது ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

தமிழாக்கம்: மவ்லவி அதாவுல் முக்னீ

எல்லோரிடத்தும் அன்பு;
எவரிடத்தும் இல்லை வெறுப்பு

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைப் பற்றி அறிந்து கொள்ள:–
www.alislam.org

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad